**கொலன்னாவை நகர சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொலன்னாவை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181(I) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொலன்னாவை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் காட்டப்படும் தேவைப்பாடுகள் தொடர்பில் விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடப்படும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உற்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி மன்றங்கள் தொடர்பான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கு தொடர்புடையதான இனங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நியமத்தின் 9.8 ஆம் பிரிவின் பிரகாரம் அரசிடமிருந்தான மானியங்கள் / கொடைகள் போன்ற பெறுவனவுகளுக்குரிய காலப்பகுதி இனங்காணப்பட்டிருக்க வில்லை. | ஒவ்வொரு நிறுவனங்களிலிருந்து நன்கொடை உருப்படிகளின் பெறுமானம் பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) நியமத்தின் 11.9 பிரிவின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் என்பவற்றிற்காக நிதி ஏற்பாடு தொடர்பாக காலப்பகுதி ஆரம்பத்தின் போதும் இறுதியின் போதும் முகப்பெறுமதி காலப்பகுதியில் சேர்த்தல் மற்றும் கழித்தல், பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பெறுமதி போன்ற ஒப்பீடுகள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டு முதல் வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் வீதி விரிவாக்கம் காரணமாக வீதி அபிவிருத்தி சபையிடமிருந்து கிடைத்த ரூபா 32,946,800 மற்றும் அத்துமீறிய நிர்மாணத்தின் போது அகற்றப்பட்ட இரும்புகள் கம்பி போன்ற விற்பனையால் கிடைத்த ரூபா 1,277,463 என மொத்தம் ரூபா 34,224,263 தொகை விரிவான வருமானக் கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த இலாபம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். அவ்வாறான பெறுமதி எதிர்காலத்தில் நானவித வருமானமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறித்த கணக்குகளை இனங்கண்டு வருமானமாக சரியாகக் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபையால் 05 மோட்டார் வாகனங்களும் இயந்திரமொன்றும் ரூபா 3,466,820 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அம்முழுத் தொகையும் சொத்துக்கள் விற்பனை இலாபமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. சொத்துகக்ளின் கிரயம் மற்றும் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சீராக்கம் செய்யாமல் அச்சொத்துக்கள் விற்பனை இலாபம் ரூபா 1,347,340 தொகையும் நட்டம் ரூபா 42,200 ஆக இருந்ததுடன் அது வெவ்வேறாக நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் விற்பனை செய்யும் போது இலாபமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 7 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூபா 37,691,083 ஆகும். வாகன விற்பனையால் கிடைத்த மொத்த தொகையும் இலாபமாக இனங்காணப்பட்டுள்ள தால் ரூபா 3,466,820 பெறுமதி திரண்ட நிதியத்திலிருந்தும் மிகை பற்றாக்குறை கணக்கிலிருந்தும் நீக்குகின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் மூலதன மானியப் பெறுவனவுகள் ரூபா 5,735,537 இற்கு உரியதாக 2021 ஆம் ஆண்டிற்காக காலக்கழிவுப் பெறுமதி ரூபா 1,147,107 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக கணக்கீட்டில் தவறியிருந்தது. அப்பெறுமதி 2022 இல் JE4 இன் மூலம் கணக்கீடு செய்யப்பட்டதாக | ஆண்டுக்குரிய காலக் கழிவினை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

**1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கு விடயமொன்றிற்குரிய நிதிக்கூற்றுகளுக்கு அமைவாக பெறுமதி மற்றும் அட்டவணைகளின் படியான பெறுமதிகளுக்கிடையே ரூபா 3,728,661 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சீராக்க நடவடிக்கை எடுப்பேன். | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்வு தொடர்பான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 06 கணக்கு விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 63,318,962 ஆன சொத்துக்கள்/ பெறுமானங்களை சமப்படுத்துவதற்காக சுட்டிக் காண்பிக்கப் பட்டிருந்த சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றைத் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்யவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாதிருந்தது. | மீதிகளைச் சீராக்கும் வரை குறித்த கணக்குகளுக்கு மாற்றப்பட்டது. ஆவணங்களில் குறைபாடுகள் சீராக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் சமர்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் | | | |
| (அ) 170 (2) | சபைக்குரிய கொடுப்பனவு அறவிடப்பட்டு நகர சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்காகத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது சபை செயலாளரின் செயற்பாடாக இருந்த போதும் 2021 ஆம் ஆண்டிற்காகச் சபையினால் 23 ஆதனங்கள் வீதவரி விடுவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டிய பிரகாரம் வரி விடுதலை வழங்கப்பட்டமை அந்த ஆதனத்திலிருந்து குடியிருப்பிலிருந்தும் பாவனையற்றும் இருப்பதால் ஆகும். ஏதேனும் திட்டவட்டமான ஆதனமொன்று காணப்பட்டால் வீதவரி அட்டுறுவாவதற்கான காரணமாக அல்லாததுடன் நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 166 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 240 ஏற்பாடுகளின் பிரகாரம் வரிச்சலுகை வழங்குவதற்காக சட்ட அதிகாரம் சபைக்குக் கிடைக்கின்றது. வரிச்சலுகை | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்குமாறு கேட்டுக் கொண்ட ஆதனம் வருமானப் பரிசோதகர்களால் முறையாக காலாண்டு வெளிக்களப் பரிசோதனை மூலம் வரியை விடுவிப்பதற்காக தகைமை பரீட்சிக்கப்பட்டு வரிக்குழு மற்றும் பொதுச்சபைக்கு சமர்ப்பித்து முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் வரி விடுவிப்ப வழங்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XIX ஆம் அத்தியாயம் -------------------- | | | |
| (i) | 6.2 ஆம் பந்தி | அரசின் வீடொன்றில் சேவையில் இருக்கின்ற அரச உத்தியோகத்தருக்கு மாத்திரமே ஒதுக்கீடு செய்ய முடியுமான போதும் அதற்கு முரணாக ஓய்வு பெற்றுச் சென்று ஒப்பந்த அடிப்படையில் சபையில் சேவை செய்யும் பொது சுகாதார பரிசோதகருக்கு சபைக்குரிய, செயலாளரின் வீடு 2009 ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்டிருந்தது. | செயலாளரின் வீடு மற்றும் அதற்குரிய பொருளிருப்புப் பொருட்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் மீண்டும் சேவையில் இருப்பதற்காக வழங்கப்பட்டிருந்த பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2018 இன் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது பதவிக்குரிய அனைத்து வசதிகளும் வழங்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகபூர்வ விடுதியை பயன்படுத்த முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. | பொது நிர்வாக சுற்றிக்கையின் 3/2018 இன் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த வீட்டை பயன்படுத்துவது தொடர்பாக பொருந்தாததால் உத்தியோகபூர்வ விடுதி மற்றும் அதில் காணப்படும் பொருளிருப்பு பொருட்கள் மீளப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 7.1 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ விடுதியிலிருந்து விலகிச் செல்லுமாறு உத்தியோகத்தர் ஒருவருக்கு கட்டளையிட்ட பின்னர் அவ்வாறு விலகிச் செல்லாவிட்டால் 1971 இன் 3 மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்க | 2020 முதல் காலாண்டில் ஏற்பட்ட கொவிட் 19 தொற்று நிலமையுடன் பொதுச் சுகாதார பரிசோதகரின் சேவை இரவு பகல் அத்தியாவசிய சேவையாக இருந்ததால் உத்தியோக பூர்வ விடுதி பயன்பாடு தொடர்பாக | அரசின் உத்தியோகபூர்வ விடுதிகள் சட்டத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் உத்தியோகபூர்வ விடுதிகள் தாமதமின்றி மீளப் |

| | | |
|---|---|---|
| சட்டங்களினால் திருத்தப் பட்ட 1969 இன் 7 ஆம் இலக்க அரசின் வீடுகள் (உரித்தினை மீளப் பெற்றுக் கொள்ளல்) சட்டத்தின் கீழ் அவரை அந்த வீட்டிலிருந்து அகற்ற வேண்டும். எனினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. அத்தோடு சட்டத்தின் 7.2 பிரிவின் பிரகாரம் குத்தகைக் காலத்தை மிகைத்து குடியிருக்கும் காலத்திற்காக தண்டப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சலுகை ஒன்று வழங்கப்பட்டது. உள்ளுராட்சிமன்ற ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திற்குப் பதில் கிடைத்த பின்னர் தண்டப்பணம் தொடர்பாக அடுத்த் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெற்றுக்கொள்ள வேண்டும |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,553,691 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,217,504 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகள் ரூபா 36,336,087 ஆல் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது..

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

**வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவையான வீதவரிப் பெறுமதி ரூபா 62,802,298 ஆக இருந்ததுடன் அவ்வீதவரி நிலுவையில் ரூபா 7,155,893 தொடர்பாக 2016 ஆம் ஆண்டின் பின்னர் எவ்விதத் தொகையும் சபையால் அறவிடப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் ஆதனங்களைத் தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டமொன்றை செயற்படுத்தி எஞ்சிய நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான வீதவரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையால் 2013 மார்ச் 13 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 4 மில்லியன் பெறுமதியான கடதாசி இயந்திரம் சபையின் சொத்துக்களாக பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த இயந்திரத்தில் பகுதிகள் உற்பத்திச் செயற்பாட்டிற்காக பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டன | ஏற்றுக் கொள்கிறேன். இந்த இயந்திரத்தின் பகுதிகள் இச்சபைக்கு வழங்கும் சந்தர்ப்பத்தில் இயந்திரம் பகுதிகளாகப் வேறாக்கப் பட்டிருந்ததுடன் அப் பகுதிகள் வெவ்வேறாக இனங்காணப்பட்டு பொருளிருப்பு பதிவேட்டுக்கு உட்படுத்த அது தொடர்பான அறிவுள்ள உத்தியோகத்தர் ஒருவர் சபையின் சேவையில் இருக்கவில்லை என்பதால் அக்கடதாசி இயந்திரத்தின் பகுதிகள் பொருளிருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட வில்லை. அந்த இயந்திரத்தின் பகுதிகள் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் இயந்திரப் பகுதிகள் வெவ்வேறாக முறையாக இணங்காண முடியாமை காரணமாக படமாக வரைந்து அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட பகுதிகள் அளவொன்றாகப் பதிவு செய்யப்பட்டு கோவை செய்யப்பட்டது. அந்த இயந்திரத்தின் பகுதிகள் சேர்க்கப்பட்டு மீண்டும் செயற்படுத்தும் நிலைமைக்கு எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. | சொத்துக்கள் முறையாக பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்கும் அவற்றை எதிர்பார்த்த நோக்கங்களுக்காக ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 நிதிய முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நடப்பாண்டில் 13 அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடான ரூபா 31,908,100 இல் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் ரூபா 26,560,000 தொகை பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாக நாடு மூடப்பட்டமை நிறுவனங்கள் மூடப்பட்டமை போன்ற காரணங்கள் காரணமாக நிதியத்தின் குறை பயன்பாடு ரூபா 26,560,000 ஆன நிதி பயன்படுத்தப்படவில்லை விசேடமாக கலாச்சார இலக்கிய உற்சவங்கள் நடாத்தப்படாமை வீதிகள், பாலங்கள், மதகுகள், காண்கள் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற் கொள்ளாமை காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | நிதி ஏற்பாட்டுகளை செயற்திறனாக முகாமை செய்யப்பட வேண்டும். |